பிற்பகல் 12-05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் சொல்லிய கருத்தையும், மற்றவர்கள் சொல்கிற கருத்தையும் தாங்கள் விசாரித்துப் பார்த்து, அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கலாமோ, அதைத் தாங்கள் முறைப்படி எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன், பேரவையின் அலுவல்கள் நடைபெறாது இடைமறித்தாலும், பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்றுப் பயன்படுத்தி வருவதாலும், முறை தவறி நடந்து கொண்டுள்ளமையாலும் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திரு. தாமரைக்கனி அவர்களை சட்டப் பேரவை விதி 121 (2)-ன் கீழ் ஒரு வாரம் காலம் வரை பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யவேண்டும்''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

தீர்மானத்தையொட்டி உறுப்பினர் தாமரைக்கனியை ஒரு வார காலத்திற்கு அவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்று தள்ளிவைக்கிறேன்.

5. பேரவை விதி 120-ன் கீழ் உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப் பெறுதல்.

உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு .ப. ரங்கநாதன் பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே இன்றைக்கு நான் வெளியேற்றியிருக்கின்ற உறுப்பினர் ஞானசேகரனை இதே பேரவைத் தொடர் கூட்டத்தில் ஏற்கனவே ஒரு முறை அவை

யிலிருந்து வெளியேற்றி இருக்கிறேன். இன்று இரண்டாவது முறையாக வெளியேற்றியிருக்கிறேன். எனவே பேரவை விதி 120-ன் கீழ் இந்தத் தொடர்க் கூட்டத்தில் எஞ்சிய நாட்களுக்கு அவரும் அவைக்கு வரக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எஸ். வி. சண்முகம்: சபைக் காவலரை உங்கள் முன் னாலேயே அடித்து இருக்கிறார்களே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றித் தனியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம் என்று அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

3. மானியக் கோரிக்கைகள், 1993–94. விவாதமும் வாக்கெடுப் பும்— தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 32—வீட்டு வசதி—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண். 33ந—கர்ப்பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வீட்டு வசதித் துறை பற் றிய மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதம் முடி வுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 32, வீட்டு வசதி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர் சிங்காரம், உறுப்பினர் தன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

''வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 25,96,98,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங் கப்பெற வேண்டும்'',

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேர வையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. அரசுக்கு கோரிய தொகை வழங்கப்படுகிறது.